Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தஞ்சைப் பெரிய கோயில் விமானம் – கட்டடக்கலை

முனைவர் இரா.இந்து
இணைப் பேராசிரியர்
அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.



**ஆய்வுச் சுருக்கம்**

கோயில்களின் முக்கிய உறுப்பான விமானத்தின் அங்கங்கள் மனித உடலின் உறுப்புகளோடு ஒப்பிடப்பட்டுள்ளன. சோழர் கோயில்களின் சிறப்புகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. சோழர் கோயில்களுள் உலகப் புகழ்பெற்ற தஞ்சைப் பெரிய கோயிலின் விமானக் கட்டமைப்பின் பல்வேறு சிறப்புகள் (அதிட்டானம் முதல் சிகரம் வரை) கட்டடக்கலை நோக்கில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் (Keywords)**

தெய்வ வழிபாடு – திராவிடக் கட்டடக்கலை- விமான அங்கங்கள் மனித உடல் ஒப்பீடு – சோழர் கோயில்கள்- தஞ்சைப் பெரிய கோயில் – பெரிய கோயில் விமானம் – கட்டமைப்பு- கட்டடக்கலைக் கூறுகள்

**முன்னுரை**

மக்கள் தமிழகத்தில் மிகத் தொன்மையான காலத்திலே தெய்வ வழிப்பாட்டைத் தொடங்கினர். மக்கள் எங்கு குடியேறினும் அங்கு முதலில் கோயிலைக் கட்டினர். ‘கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்ற பழமொழி உண்டு. உடம்பும் உயிரும் போல கோயிலும் இறைவனும் கருதப்பட்டன.

**விமானம் – உடல் அங்கங்கள்**

தென்னிந்திய திராவிடப் கட்டடக்கலையின் முக்கிய அமைப்பாக விளங்குவது விமானமாகும். இறையுருவம் இடம்பெறும் கருவறையின் அடித்தளம் முதல் கலசம் வரையிலான பகுதியே **விமானம்** எனப்படுகிறது. வட இந்தியப் பாணியில் இப்பகுதி சிகரம் எனப்படும்.

விமானம் ஆறு அங்கங்களைக் கொண்டது. இந்த ஆறு அங்கங்களும் மனிதனது உடற்கூறு அமைப்புடன் தொடர்புடையதாக அறிஞர்கள் கூறுவர்.

அதிட்டானம், பித்தி, பிரஸ்தரம், கண்டம், சிகரம், ஸ்தூபி என ஆறு உறுப்புகளும் விமானத்தின் அங்கங்களாகும். அவை மனித உடலமைப்பில் முறையே பாதம், கால், தோள், கழுத்து, தலை, மகுடம் எனும் உறுப்புகளுக்குப் பொருத்தமானதாக அமைகின்றன. ஆறு உறுப்புகளைக் கொண்ட விமானம் **ஷடாங்க விமானம்** எனப்படுகிறது.

சோழர் கட்டடகலையானது பல்லவர்கள் கட்டடக்கலை பாணியின் தொடர்ச்சியாகவே கருதப்படுகிற்து. முதலாம் இராஜராஜன் மற்றும் அவ்வரசருடைய மகன் இராஜேந்திரன் சோழர் காலத்திலேயே அளவிற் பெரிய கோயில்கள் கட்டப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது தஞ்சைப்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பெரிய கோயில். அக்கோயிலின் விமானம் பல்வேறு கட்டடக்கலைக் கூறுகளை உள்ளடக்கியது. எனவே, பெரிய கோயில் விமானத்தின் கட்டடக்களைக் கூறுகளை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**சோழர் கோயில்கள்**

சோழரது கோயில்கள் பெரும்பான்மையாக காவிரி ஆற்றின் இருபுறமும் அமைந்துள்ளன. இவை அதிட்டானம் முதல் சிகரம் மற்றும் கலசம் வரையில் முழுமையாக கற்களால் கட்டப்பட்டவையாக விளங்குகின்றன.

சோழரது கோயில்கள் பெரும்பாலானவை சைவக் கோயில்கள். எனவே, கருவறைகளில் சிவலிங்கம் இடம் பெற்றுள்ளது.

சோழர்கள் தம் கோயில்களின் உயரத்திற்காகவும், கம்பீரத்திற்காகவும் அழகிற்காகவும் விமானத்தின் அதிட்டானப் பகுதியின் கீழ் உபபீடம் (**Sub -Pedestal**) எனும் அமைப்பை இடம்பெறச் செய்தனர். விமானம் ஏகதளம் முதல் 13 தளங்கள் கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளன.

விமானத்தின் பக்கப் பகுதி தேவகோட்டங்களில் இறையுருவங்களை அமைத்தார். தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோத்பவர் அல்லது அர்த்தநாரீஸ்வரர், விஷ்ணு இந்த தெய்வ உருவங்களில் ஏதாவது ஒன்றும், வடக்கே நான்முகன் என தெய்வ உருவங்களை அமைத்தனர்.

**தஞ்சைப் பெரிய கோயில்**

தஞ்சைப் பெரிய கோயில் பிரஹதீஸ்வரர் ஆலயம் (பிரஹத்=மிகப்பெரிய, ஈஸ்வரன் = சிவன், ஆலயம் = கோயில்) என்று வடமொழியில் வழங்கப்படுகிறது; தமிழில் பெருவுடையார் கோயில் என்று வழங்கப்படுகிறது.

தஞ்சைப் பெரிய கோயிலின் அஸ்திவாரம் 5 அடி மட்டுமே ஆகும். இக்கோயிலின் கட்டுமான அமைப்பும், வழிபாட்டு நெறிகளும் தனித்தன்மை உடையவை. சைவ சமயத்தின் உன்னதக் கோட்பாட்டை விளக்கும் வடிவமே இக்கோயிலின் அமைப்பாகும். இக்கோயில் புறத் தோற்றத்தில் சிவபெருமான் வீற்றிருக்கும் **'மகாமேறுபர்வதம்'** எனும் பொன்மலையாகவும் (ஆகாய கயிலாசம்). அகத்தோற்றத்தில் பரமானந்தம் எனும் பிரபஞ்ச வெளியே சிவவடிவம் என்பதைக் காட்டும் பெருங்கோயிலாகவும் விளங்குகின்றது. இக்கோயிலை வீரசோழன் குஞ்சர மல்லனான ராசராசன் பெருந்தச்சன் தலைமையின் கீழ் இராஜராஜ சோழன் காலத்தில் கட்டப்பட்டது.

தஞ்சைப் பெரிங் கோயில் மாமன்னன் இராசராசனால் கி.பி.1003 ஆம் ஆண்டில் கட்டத் தொடங்கப்பெற்று கி.பி.1010 ஆம் ஆண்டில் நிறைவு பெற்றது. 3.66 மீ. உயரம் கொண்ட லிங்க வடிவிலான சிவன், பெருமன்னன் இராசராசன் பெயரால் இராசராசேச்சுரமுடையார் என்று அழைக்கப்பட்டார்.

ஏறத்தாழ 50 கி.மீ தூரத்திற்கு வெளியிலிருந்து கொண்டு வரப்பெற்ற கருங்கற்களைக் கொண்டு 240 மீ. நிலமும் 120 மீ அகலமும் கொண்ட பெரும்பரப்பில் இக்கோயில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் சிகரம் எட்டுத்துண்டுகளான 81.284 டன் எடையுள்ள கொண்டதாய் விளங்குகிறது. இத்திருக்கோயிலின் கருவறை மேல் கட்டப்பட்டப் பகுதியான

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

விமானம் 60.96 மீ. உயரம் கொண்ட பிரமாண்டமான படைப்பு ஆகும். சதுர வடிவிலான கருவறையினைக் கொண்ட இக்கோயில் விமானம் இரட்டைச்சுவர்களால் ஆனது. இதன் காரணமாகவே இவ்விமானம் மேலுயர்ந்து நிற்பது சாத்தியமாயிற்று.

**பெரிய கோயில் விமானம்**

இவ்விமானம் 30.18 மீ.சதுர அளவுடைய உயர்ந்த அதிட்டானத்தின் மேல் கருவறை நடுவே திகழ அதனைச் சுற்றி நான்கு புறமும் வாயில்களுடனும் **அந்தராளம்** எனும் சுற்று அறையுடனும் திகழ்கின்றது.

இராஜராஜேச்வரமுடையார் எனும் மிகப் பெரிய இலிங்கத் திருவுருவம் (இலிங்கோத்பவார்) நடுவே திகழ, ஒரே வாயிலும் 11 அடி கனமுடைய சுற்றுச் சுவர்களுடனும் கருவறை உள்ளது.

கருவறைக்கு வெளிப்புறம் அமைந்துள்ள அந்தராளம் என்னும் அறை 6 அடி அகலமுடையதாய் விளங்குகிறது. இதற்குப் புறச்சுவர்களாய்த் திகழும் நான்கு சுவர்களின் அகலம் 13 அடி கனமுடையதாகும். இவ்விரு உட்சுவர்களும், புறச்சுவர்களும் விளங்க விமானம் மேலெழுகின்றது.

அந்தராளத்தின் முதல் தளம் உள், வெளிச்சுவர்களை இணைத்து அதற்குமேல் மற்றொரு சுற்றறையை ஏற்படுத்தி நிற்கின்றது.

**விமானம் – கட்டமைப்பு**

இரண்டாம் தளத்தில் உள்ள சுற்றறையில் சிவபெருமானே நாட்டியம் ஆடுவதாக உள்ள கரணச் சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பத் தொகுப்பில் மொத்தம் 108 கரணச் சிற்பங்கள் செதுக்க உத்தேசிக்கப்பட்டு 81 மட்டும் முடிக்கப்பட்டுள்ளது. இதில் 50 ஆவது சிற்பம் 'லலாட திலகம்', என்றும் 76 ஆவது சிற்பம் 'ஸுசி' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றறையின் மேல் நிலையில் இரு பக்கச்சுவர்களும் ஒவ்வொரு அடிக்கிலும் ஒவ்வொரு கல்லாக நீண்டு இறுதியாக உட்புறச்சுவர்களும் வெளிப்புறச் சுவர்களும் ஒன்றாக இணைந்து 30 அடி கனமுடைய தளத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இத்தளத்திலிருந்து சதுர வடிவில் பிரமிட் அமைப்பில்குவிந்தவண்ணம் 13 அடுக்குகளில் விமானம் மேல் நோக்கி உயர்ந்து சென்று கடைசியாக 8.7 மீ. பக்க அளவுடைய ஒரு சதுரத்தளத்தை உருவாக்குகின்றது.

தளத்தின் மேல் நான்கு மூலைகளிலும் 134 மீ. உயரமும் 140 மீ. அகலமும் கொண்டு பக்கத்துக்கு இரண்டிரண்டாக எட்டு நந்திகள் உள்ளன. மையத்தில் 20 மீ. சுற்றளவுள்ள கிரீவம், அதன் மேல் பிரம்மாண்டமான சிகரம் ஆகியவற்றோடு சுமார், 12 அடி உயரமுடைய கலசத்துடன் கம்பீரமாகத் திகழ்கிறது.

இவ்விமானம் ஆணின் கம்பீரத் தோற்றமுடையதாக கட்டடக்கலை ஸ்தபதிகள் கூறுவதுண்டு.

விமானக் கட்டமைப்பு கதளிகாக் கட்டமைப்பு (Interlock Construction) எனப் படுகிறது. இதற்கு உள் இணைப்பமைப்பு எனப் பொருள்படும். சிகரத்தின் நான்கு திக்குகளிலும் எழில் கொஞ்சும் கீர்த்தி முகங்கள் உள்ளன. மையத்தில் யாளித்தலை வரிசையும், அதற்குக்கீழ் வாள், கேடயம் ஏந்திய பூதகணங்களின் வரிசையும், அதற்குக் கீழே அணிவகுத்து நிற்கும் யானைகளின் வரிசையும், அனைத்திற்கும் கீழாக யாளி முகவரிசையும் கொண்டு இந்தக் கீர்த்தி முகங்கள்

அமைந்துள்ளன. கிரீவத்தின் நான்கு திசைகளிலும் கீர்த்திமுக அமைப்புக்குக் கீழாகப் பத்மாசனத்தில் சிவபெருமான் அமர்ந்துள்ள சிற்பங்கள் உள்ளன.

கிரீவத்தோடு சிகரம் அமைந்துள்ள 8.7 மீ. சதுரத் தளம் ஒரே கல்லால் ஆனது அல்ல. இக்கட்டுமானம் முழுவதும் பல துண்டுக் கற்களால் ஆனது என்பது உறுதியாகத் தெரிந்ததாகக் கூறப்படுகிறது.

**பெரிய கோயில் விமானம் – கட்டடக்கலைக் கூறுகள்**

**1. அதிட்டானம் (BASE)**

கருவறையின் மேல் உறுப்புகளாகிய சுவர்(பாதம்), கூரை (பிரத்தரம்) விமானம் அல்லது கோபுரம் ஆகியவை எழுவதற்குத் திண்ணையாகவும் அடிவாரமாகவும் ஆதாரமாகவும் உறுதியுடன் கூடியதாக அமைக்கப்படும் உறுப்பிற்கு அதிட்டானம் என்று பெயர்.

அதிட்டானம் பாதபெந்த அதிட்டானம் (கால்கள் காட்டப்படுபவை), பிரதி பெந்த அதிட்டானம் (கால்கள் காட்டப்படாதவை) என இரு வகைப்படும்.

**தஞ்சைப் பெரிய கோயில் விமான அதிட்டானம் பிரதிபெந்த அதிட்டானமாகும்.**

**2. உபபீடம் ( SUB PEDESTAL)**

இது விமானத்தின் அழகிற்காகவும் கம்பீரத்திற்காகவும் உறுதிக்காகவும் அமைக்கப்படுகிறது. விமானத்தின் உயரத்தைக் கூட்ட அதிட்டானத்தின் அடியில் உபபீடம் அமைக்கப்படுவதுண்டு.

**தஞ்சைப் பெரிய கோயில் விமானம், கோபுரங்கள் இவை உபபீடத்துடன் காணப்படுகின்றன.**

**3. பித்தி - (கால்/ சுவர்) (PEDESTAL)**

கால் எனப்படும் சுவர்ப் பகுதியானது அதிட்டானத்தின் மேல் அமையும் பகுதியாகும். இது கால் அல்லது சுவர் என அழைக்கப்படும்.

**தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தில் இவ்வுறுப்பும் உண்டு.**

**4. பிரஸ்தரம்- (தோள் / கூரை) (ROOF)**

தஞ்சைப் பெரிய கோயில் விமானம் 13 அடுக்குகளை உடையது. இது பிரமிடு போல் நான்கு சரிவான பட்டைகளை உடையது.

விமான முகப்புப் பக்கத்தில் சிவன், பார்வதி பரிவாரங்களுடன் மேருமலையில் வீற்றிருக்கும் காட்சி புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது (கள ஆய்வு).

**5. கண்டம் -(கழுத்து - கிரீவம்) (NECK)**

கீழ்ப்பகுதி விரிந்தும் மேற்பகுதி குவிந்தும் வரும் விமானத்தில் இடம்பெறும் நான்காம் அமைப்பு அதன் கழுத்துப் பகுதியாகும்.

தஞ்சைப் பெரிய கோயில் சிவன் கோயில் என்பதால் நான்கு மூலைகளிலும் இரண்டு இரண்டு நந்திகள் (இடபங்கள்) காணப்படுகின்றன.

**6. சிகரம் - (தலை) (STUPA)**

கழுத்தின் மேல் அமையும் உறுப்பு சிகரம் அல்லது தலை எனப்படுகிறது. இதன் அமைப்பைப் பொறுத்து அவ்விமானத்திற்குப் பல்வேறு விதமான பெயர்கள் அமையும்.

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

தஞ்சைப் பெரிய கோயில் விமானம் சிகரம் எட்டுப்பட்டைகளால் ஆனது. எனவே, இது திராவிடப் பாணி சிகரம் ஆகும்.

**7. ஸ்தூபி - (மகுடம் - குடம்) (STUPA)**

கலசங்கள் அறிவியல் வளர்ச்சி இல்லாத அக்காலத்தில் இடிதாங்கிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கலசத்தினுள் வரகு தானியம் நிரப்பபட்டிருக்கும். இத்தானியத்திற்கு இடியைத் தாங்கும் சக்தி உண்டு என்பர். கும்பாபிஷேகத்தின் போது இவ்வரகு அரிசி மாற்றப்படும்; இக்கலசத்தின் மீது புனித நீர் தெளிக்கப்படும்.

தஞ்சைப் பெரிய கோயில் ஸ்தூபி செம்பினால் ஆனது.

**8. பஞ்சரம்**

தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தின் முதல் தளத்திலிருந்து 13 ஆம் தளம் வரை கர்ணகூடுகளுக்கும் சாலைக்கும் இடையில் பஞ்சரங்களும் காணப்படுகின்றன. விமானத்தின் வடக்குப் பகுதியில் சண்டிகேஸ்வரர் ஆலயத்திற்கு முன் கும்ப பஞ்சரங்கள் காணப்படுகின்றன.

**9. தேவகோட்டம் (NICHE)**

கருவறையின் சுவர்ப்பகுதியில் நுழைவு வாயில் தவிர ஏனைய மூன்று பக்கங்களிலும் தேவகோட்டங்கள் அமைக்கப்படும்.

**தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தில் மொத்தம் 31 தேவகோட்டங்கள் உள்ளன.**

**10. அரைத்தூண்கள் (PILASTERS)**

விமானத்தின் சுவர்ப்பகுதியில் இடம்பெறும் அலங்கார வேலைப்பாடுகளுள் ஒன்றே அரைத்தூண் அமைப்பாகும். தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தில் அரைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**11. பூதகணம்**

பூதகணங்கள் ஆடிக் கொண்டும், இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டும் காட்சியளிக்கும்.

**தஞ்சைப் பெரிய கோயில் கொடுங்கை எழுதகத்தில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.**

**12. கபோதம்**

எழுதகத்தின் மீது பயன்பாட்டுத் தேவை கருதி அமைக்கப்படும் உறுப்பு கபோதம் ஆகும். இது மழைநீர் கருவறைச்சுவரின் வெளிப்பகுதியில் படாமலிருப்பதற்காக அமைக்கப்படுவதாகும். இக்கபோதம் கூடுகளுடன் அமையும்.

**தஞ்சைப் பெரிய கோயில் விமானத்திலும் மண்டபத்திலும் கபோதம் உள்ளது.**

**13. கூடுகள் (KUDU/VITANKA)**

கபோதம் அதிட்டானத்திலோ, தேவகோட்ட சாலை அமைப்பிலோ, விமானத்தின் கூரைப் பகுதியிலோ அலங்கரிப்பதற்காகக் கூடுகள் அமைக்கப்படும்.

பெரிய கோயில் விமான சிகரத்தில் உள்ள கூடுகள். பார்க்க தோகை விரித்த மயில் போல் காணப்படும்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**14. யாளிவரி (Leo Graph)**

கொடுங்கைக்கு மேல் சிங்கமும் புலியும் சேர்ந்த உருவம் போன்று அல்லது சிங்கமும் யானையும் சேர்ந்தது போன்ற யாளி எனப்படும் விலங்குருவங்களை வரிசையாகக் காட்சிப்படுத்துவர். இவ்வமைப்பை யாளி வரி என்பர்.

**யாளிகள் என்பவை துதிக்கை உடைய சிங்க முகம் எனலாம். தஞ்சைப் பெரிய கோயில் விமான அதிட்டானத்தில் யாளிவரிகள் உள்ளன.**

**15. கொடிமரம் (துவஜஸ்தம்பம்)**

கோயில்களின் முக்கிய உறுப்புகளில் கொடிமரமும் ஒன்று. கொடிமரம் என்பது மகோற்சவம் கொண்டாடப்படும் கோயில்களில்தான் பெரும்பாலும் இடம் பெற்றிருக்கும்.

**தஞ்சைப் பெரிய கோயில் கொடிமரம் நந்தி மண்டபத்திற்கும் விமானத்திற்கும் இடையில் உள்ளது.**

**16. பலிபீடம்**

பலிபீடம் என்பது கடவுளருக்குப் பூசைக் காலத்தில் பலி (உணவு) படைப்பதற்காக அமைக்கப்படும் பீடமாகும்.

தஞ்சைப் பெரிய கோயிலில் **விமானம் கருவறை மேடைக்குக் கீழ் பலிபீடம் உள்ளது.**

**17. பிரநாளம்**

இது இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் திருமஞ்சன நீர் வெளியேறுவதற்காக அமைக்கப்படும் ஒரு கட்டடக்கலைக் கூறாகும்.

**தஞ்சை பெரிய கோயில் விமானத்தின் வடக்குப்பகுதியில் சண்டிகேஷ்வரர் சன்னதிக்கு முன் உள்ளது. சோடனையற்ற முப்பட்டை பிரநாளத்தை பூதகணம் ஒன்று தலையில் சுமந்திருக்கிறது (களஆய்வு).**

பெரிய கோயிலின் சுப்பரமணிய சுவாமி திருக்கோயில் பிரநாளம் முதலை வாயிலிருந்து வரிப்பள்ள வெளி அமைப்புடைய கோமுகம் உடையது.

**தொகுப்புரை**

பல்வேறு கட்டடக்கலைக் கூறுகளை உள்ளடக்கிய பெரிய கோயில் விமானம் சோழர்களின் கட்டடக்கலையின் உச்ச வெளிப்பாடு மட்டுமின்றி தமிழர்களின் பொறியியல் சாதனையாகவும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**துணைநூற்பட்டியல்**

1. **தெய்வ நாயகம்.கோ** — **தமிழர் கட்டிடக்கலை**
New Century Book House,
Chennai.
1989

2. **சுந்தரம் இராம.** — **தமிழக அறிவியல் வரலாறு**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-05
2004

3. புலமை வெங்கடாசலம் - தஞ்சாவூர் பெரிய கோயில் வரலாறு
பாவை பப்ளிகேஷன்ஸ்,
சென்னை.
2009

4. மணிவண்ணன் அம்பை - தமிழக கோயில் கலை வரலாறு
ஜெ. ஜெ. பதிப்பகம்,
மதுரை.
2015

5. பார்த்தசாரதி.நா பழந்தமிழர் கட்டடக்கலையும்
நகரமைப்பும்,
சீதை பதிப்பகம்,
சென்னை
2019